*வியாபாரப் பெருங்குடி மக்களுக்கும் இதன் உபயோகம் குறித்த ஒரு தெளிவான சுற்றறிக்கையை அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

## (ஆஇ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிப் பயன்பாடு, உயர்மின் கோபுரம் அமைத்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள விதிமுறைகளைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) ஏதோ கேட்க வேண்டும் என்று சொன்னீர்களே!*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதி குறித்து கேட்கிறார்கள். தாங்களே அழைத்து வாய்ப்புக் கொடுப்பதால், நானும் தொகுதி குறித்து கேட்கலாம், ஆனால், எங்கள் மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் அமலில் இருப்பதால், நான் கேட்க முடியாது. ஆகையால், நான் எப்போதும் பொதுநலவாதி; இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக சேர்த்துக் கேட்கிறேன்.* Finance Minister *இருக்கிறார். அன்றைக்கே பேசினேன்.* Evasive Order *கொடுத்து விட்டீர்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ரூ.2.5 கோடி கொடுக்கிறீர்களே தவிர, ** அதிலே இந்தச் செலவு செய்யுங்கள், அந்தச் செலவு செய்யுங்கள் என்று. . .*

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தாங்கள் கூறிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

**திரு. துரைமுருகன்:** *அந்த 2½ கோடி ரூபாயில், 'நீங்கள் அந்தப் பணிகளை செய்யுங்கள், இந்தப் பணிகளைச் செய்யுங்கள்' என்று அரசாங்கம் சொல்கிறது. நீங்கள் செய்ய வேண்டியதையெல்லாம் சேர்த்து எங்களைச் செய்யச் சொல்கிறீர்கள். நான் முழுக்க முழுக்கச் சொல்கிறேன். அந்த 2½ கோடி ரூபாயையும்* M.L.A.–*க்கள் அவர்கள் இஷ்டத்திற்கு தொகுதியில் செலவு செய்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அனுமதி கொடுங்கள். (மேசையைத் தட்டும்*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

ஒலி) ஏனென்றால், அதில் சில நேரங்களில் எங்கள் தொகுதியில் இல்லாத திட்டமும் வருகிறது. "அதற்குப் பணம் கொடுங்கள் சார், மாற்றிக்கொள்ளலாமா" என்று கேட்டால் Collector மாற்றக் கூடாது என்று சொல்கிறார். எனவே, கொடுக்கிறது கொடுக்கிறீர்கள். எங்கள் இஷ்டத்திற்குக் கொடுத்தால், அவரவர்களுக்கு என்னென்ன தேவையோ அதைச் செய்வார்கள், Number 1. Number 2, அன்றைக்கே நான் சொன்னேன். கொஞ்சம் relax செய்து, high–mast lighting போடுவதற்கு அதிலிருந்து provision செய்து கொடுங்கள் என்று கேட்டேன். பேசாமல் உட்கார்ந்துவிட்டீர்கள். இப்போது விடமாட்டேன். சொல்லுங்கள். எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை ஆரம்பித்து விடலாம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினுடைய norms பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர். உங்களுடைய ஆட்சியிலும் அந்த norms இருந்தன. Norms இரண்டு பக்கமும் இருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, நான் முடித்துவிடுகிறேன். இரண்டு பக்கமும் norms இருந்தன. அது தொடர்ந்து இருக்கக்கூடிய norms-தான். அதை வேண்டுமென்றால் refer செய்துகொள்ளச் சொல்லுங்கள். சில norms–ஐ குறிப்பாக, குடிநீர்த் திட்டப் பணிகள், கட்டடங்கள் என்று கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 50 சதவிகிதத்திற்குமேல் அவர்களுடைய விருப்ப நிதியாகக் கொடுத்துக்கொள்ளலாம். ஆக, இது தொடர்ந்திருக்கிற வழிமுறைகள். நீங்கள் high–mast lighting பற்றி சொன்னீர்கள். அதுவும் பரிசீலனையில் இருக்கிறது. கண்டிப்பாக அதைச் செய்யலாம். High–mast lighting போடும்போது, அதிகமாக மின்சாரம் செலவாகிறது. அதனால்தான், நாம் high–mast lighting–ஐத் தடை செய்தோம். இருந்தாலுங்கூட, நீங்கள் சொன்னதை கவனத்தில் எடுக்கிறோம். ஆனால், அந்த norms, அவசியமாக குறைவான அளவுக்கு இருந்தால்தான் அது சரியாக இருக்கும். அந்த norms–ஐ நீங்களும் வைத்திருந்தீர்கள், நாங்களும் வைத்திருக்கிறோம். அந்த norms இருப்பது நல்லது

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதைக் கேட்டாலும் உங்கள் ஆட்சியில் இருந்தது, உங்கள் ஆட்சியில் இருந்தது என்று சொல்கிறீர்கள். எங்கள் ஆட்சியில் இருந்தது என்று சொல்லிக்கொண்டே இருந்தீர்களென்றால், எங்கள் ஆட்சிமாதிரி வந்துவிடுவீர்கள். ஆகையால், நாங்கள் கேட்பது, M.L.A.–க்களுக்குக் கொடுக்கிறீர்கள். நீங்கள் சில இடங்களில் ரோடு போடுகிறீர்கள். Private இடமாக இருக்கும். ஆனால், அந்த ஊரில் ஓட்டு கிடைக்கும். அங்கு School இருக்கிறது, Private நடத்துகிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதேனும் செய்து கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் உங்கள் norms ஒத்து வருவது கிடையாது. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், எங்களுக்குக் கொடுக்கிற நிதியை எங்கள் இஷ்டத்திற்கு, எங்கள் தொகுதியில் பணிகள் செய்வதற்கு நீங்கள் எதற்குக் கடிவாளம் போடுகிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். நீங்களும் உறுப்பினர்தானே! (குறுக்கீடு) நீங்களும் உறுப்பினர்தானே! நீங்களும் ஒரு வீட்டுக்கு மருமகன்தானே! ஆக, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துதான் நான் கேட்கிறேன். இது உங்களுக்கும் சேர்த்துதான் Sir. உங்களுக்கும். (சிரிப்பு) ஆகையினால், Finance Minister இருக்கிறார். உங்கள் பழைய கதையை எல்லாம் நீங்கள் பேசக் கூடாது. Correct–ஆக, நீங்கள் கூடுதலாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. இருக்கிறதை ஒழுங்காகக் கொடுத்தால் போதுமென்பதுதான் என்னுடைய கருத்து. ஆகையால், high–mast lighting–க்கும் மற்றும் பணம் restriction இல்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

## (ஆஈ) பொன்னேரி தொகுதி, சிறுவாபுரி பாலசுப்பிரமணியர் கோயில் குளத்தைத் தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, சிறுவாபுரி, அருள்மிகு